# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 205/ந/2025.  நாள் 08.05.2026

S.அன்பழகன்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

1)நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – எதிர்மனுதாரர்கள்
2)உரிமையாளர், ஸ்ரீ லட்சுமிபிரியா காம்ப்ளக்ஸ்
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவரின் 22.05.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.05.2025 அன்று பெறப்பட்டு 205/ந/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவர் தனது 22.05.2025 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“திருச்சி மாவட்டம், துறையூர் திருச்சி சாலையில் அன்னை மருத்துவமனைக்கு வடக்கில் இருக்கும் ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடம் விதிமீறி செயல்படுகிறது. ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடத்தில் கீழ் தளத்தில் ராயல் பர்னிச்சர் அன்ட் எலக்ட்ரானிக்ஸ் ககட 5000 சதுர அடியில் இயங்கி வருகிறது. அதுபோக கீழ்தளத்தில் பேட்டா கடை, சித்ரா ஜெராக்ஸ் கடை இயங்கி வருவதோடு, தரை தளத்தில் வடக்கு சைடில் 6 கடைகள் மொத்தம் 5000 சதுர அடியில் இயங்கி வருகிறது. முதல் தளத்தில் ராயல் பர்னிச்சர் எலக்ரானிக்ஸ் குடோன் 5000 சதுர அடியில் இயங்கி வருகிறது. மேலும் முதல் தளத்தில் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிறுவனம் 5000 சதுர அடியில் இயங்கி வருகிறது. இரண்டாம் தளத்தில் திருகுமரன் ஆட்டோ பைனான்ஸ் மற்றும் 3 தங்கும் அறைகள் 2000 சதுர அடியில் இயங்கி வருகிறது. அதுபோக இரண்டாம் தளத்தில் 2 அறைகள் உள்ளது. மூன்றாம் தளத்தில் 2 அறைகள் உள்ளது. ஏகப்பட்ட நிறுவனங்களுக்கு வாடகைக்கு விட்டு கொண்டு வாகனம் நிறுத்துவதற்கு பார்க்கிங்கென்று ஒரு அங்குலம் கூட இடம் விடவில்லை. மேலும் கட்டிடத்தின் மெயின் வாசல் அரசு கழிவு நீர் கால்வாயை மூடி கால்வாயின் மேல் வாசல்படி வைக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து விதமான விதிமுறைகளையும் மீறி செயல்படும் ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடத்தை உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படி இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி துறையூர் நகராட்சி ஆணையருக்கு 20.03.2025–ல் புகார் அனுப்பி அதனை அவர் 21.03.2025ல்

பெற்றுக்கொண்டதாக எனக்கு ஒப்புதல் சான்று வந்துள்ளது. நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை அரசு இணைச்செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குனருக்கும் அனுப்பி என் புகாரை பெற்றுக்கொண்டு ஒப்புகை சான்று வந்துள்ளது.

என் புகாரின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கடித எண்.2092/MA-1/2025-1 நாள் 24.03.2025 தேதியிட்ட கடிதம் மூலம் அரசு இணைச்செயலாளர் அவர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உத்தரவு பிறப்பித்து அதன் நகலை துறையூர் நகராட்சி ஆணையருக்கும் அனுப்பினார். அரசு இணைச்செயலாளர் உத்தரவை ஆணையர் கடுகளவு கூட மதிக்கவில்லை. மேலும் நான் நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே ஏற்கனவே அவருக்கு எதிராக விதிமீறிய ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத காரணத்தால் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த வழக்கின் விவரத்தையும் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே கட்டிடங்கள் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுப்பிய சுற்றறிக்கையை பின்பற்றி இருந்தாலே இதுபோன்ற விதிமீறல் கட்டிடங்களை தடுத்திருக்கலாம் என்றும் சுட்டிகாட்டி இருந்ததோடு வரிவிதிப்பு முறையை முறையாக பின்பற்றினாலே விதிமீறல்களை தடுத்திருக்கலாம் என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் கூறியதையும் ஆணையர் பின்பற்றவில்லை என்று குறிப்பிட்டதோடு திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் விதிமீறல் தொடர்பான கட்டிட வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் நேரில் அழைத்து கண்டித்ததையும் நினைவூட்டியிருந்தேன். முறையான அனுமதியின்றி செயல்படும் கட்டிடத்தை இடிப்பது அதிகாரிகளின் கடமை என்றும் அதை செயல்படுத்தாத அதிகாரிகள் மீது மாண்புமிகு உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளதையும் ஆணையருக்கு சுட்டிகாட்டி இருந்தேன்.

மேலும் ஆணையர் அவரின் உயர் அதிகாரிகளின் உத்தரவை மதிக்காவிட்டாலும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்திடம் பயமும் மரியாதையும் கொண்டு துறையூர் திருச்சி சாலையில் செயல்படும் ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடம் விதியை அப்பட்டமாக மீறி கட்டிடத்தை சுற்றியும் 1 அடி கூட இடம் விடாமல் கட்டி உள்ளதால் எதிர்பாராமல் தீவிபத்து ஏற்பட்டால் தீயை அணைக்க முடியாத ஒரு அவலநிலை ஏற்பட்டு பல உயிர்பலி ஏற்படும் என்பதை கவனத்தில் கொண்டு பல நிறுவனங்களுக்கு வாடகைக்கு விட்டு கொண்டு அந்த நிறுவனங்களுக்கு தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் வாகனத்தில் வருவதால் வாகனங்கள் அனைத்தும் தார்சாலைவரை நிறுத்தப்படுவதால் பொதுமக்கள் நடக்க இடமின்றி தார்சாலையில் நடந்து அதனால் விபத்து ஏற்படுவதற்கு ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடம் பார்க்கிங் இல்லாமல் செயல்படுவதுதான் காரணம் என்பதை விளக்கி உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படி இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி புகார் கொடுத்திருந்தேன். இவ்வளவு தெள்ள தெளிவாக புகார் கொடுத்தும் ஆணையர் இதுவரை ஸ்ரீ லட்சுமி பிரியா கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதில் இருந்து ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடத்திற்கு உடந்தையாக செயல்படுகின்றார் என்பது தெள்ள தெளிவாக விளங்குகிறது.

எனவே உச்சபட்ச நேர்மை கொண்ட மாண்புமிகு, மரியாதைக்குரிய தாங்கள் தங்களின் நேரடி பார்வையில் ஒரு குழு அமைத்து ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடத்தை இட நேராய்வு செய்து மனுநீதிச்சோழன் போல் நீதி வழங்குவதோடு, தவறு செய்த நகராட்சி ஆணையர் மீது சட்டப்படி, தர்மப்படி தக்க தண்டனை வழங்குமாறு தங்களை தாழ்மையுடன், பணிவுடன், கீழ்ப்படிந்து வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் துறையூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.1427/2025/எப்1, நாள் 05.12.2025.ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

"விசாரணையில் மேற்படி ஸ்ரீ லட்சுமிபிரியா நிறுவனம் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் தலா 10000 சதுர அடி பரப்பளவில் RCC கட்டிடம் அமையப்பெற்ற ஸ்ரீ லட்சுமிபிரியா வணிக வளாக கட்டிடம் இயங்கி வருகிறது. இரண்டாம் தளத்தில் 1000 சதுர அடி பரப்பளவில் RCC Building அமையப்பெற்ற + மொட்டைமாடி (பயன்பாட்டில் இல்லை) கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 11000 சதுரடியாகும். தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னரும், கட்டப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வருகிறது. கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதாலும், ஆவணங்களை தேடித்தருவதாகவும் மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் நகராட்சி அலுவலகத்தில் இல்லை. எனவே மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)–ன் கீழ் ஸ்ரீ லட்சுமிபிரியா உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உபயோகத்தில் உள்ள கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 11000 சதுரடிக்கு 2750 சதுரடி இடம் வாகனம் நிறுத்துமிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஸ்ரீலட்சுமிபிரியா உரிமையாளர் வாகனம் நிறுத்துவதற்கு இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

எனவே, மேற்படி, கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் ஸ்ரீ லட்சுமிபிரியா உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டிடத்தின் முன்புறத்தில் திருச்சி சாலையில் உள்ள கழிவுநீர் கால்வாயில் நிரந்தர கட்டுமானம் ஏதுமில்லை.

கட்டிட உரிமையாளர் திருமதி.பா. லெட்சுமிபிரியா வரிவிதிப்பு எண்கள். 087/020/900505, 087/020/900506, 087/020/900507, 087/020/900508, 087/020/900509, 087/020/900193, 087/020/900194, 087/020/900195, 087/020/900196, 087/020/900197, 087/020/900198, 087/020/900200, 087/020/900201, 087/020/900202, 087/020/900203, 087/020/900500, 087/020/900501, 087/020/900502, 087/020/900503 மற்றும் 087/020/900504 ஆகிய இருபது வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர்குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை.

ஆக்கிரமிப்பு தொடர்பாக நில அளவீடு செய்து தருமாறு வட்டாட்சியருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிட உரிமையாளர் ஆகியோரை 06.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.12.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.S.அன்பழகன் 06.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில் –

“துறையூர்–திருச்சி சாலையில் அன்னை மருத்துவமனைக்கு வடக்கில் உள்ள ஸ்ரீ லெட்சுமிபிரியா என்கிற கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் கீழ்தளத்தில் 5000 சதுர அடியில் ராயல் பர்னிச்சர் அன்ட் எலக்ட்ரானிக்ஸ் கடையும், அதேபோல் கீழ்தளத்தில் போட்டோ கடை, சித்ரா ஜெராக்ஸ் கடை இயங்கி வருகிறது. தரைத்தளத்தின் வடக்கு பகுதியில் மொத்தம் 5000 சதுர அடியில் 6 கடைகளும், முதல் தளத்தில் 5000 சதுர அடியில் ராயல் பர்னிச்சர் குடோனும், 5000 சதுர அடியில் கும்பகோனம் பரஸ்பர நிதி நிறுவனம், இரண்டாம் தளத்தில் திருக்குமரன் ஆட்டோ மொபைல்ஸ் மற்றும் 3 தங்கும் அறைகள் 2000 சதுர அடியில் இயங்கி வருவதோடு, 3ம் தளத்தில் 2 அறைகளும் உள்ளது.

மேற்படி கட்டிடத்தின் மெயின் வாசல் அரசு கழிவுநீர் கால்வாயை மூடி கால்வாயின் மேல் வாசற்படி வைக்கப்பட்டு, பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமலும், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் செட் பேக் விடாமல் கட்டப்பட்டுள்ளது. எனவே அனைத்து விதமான விதிமுறைகளையும் மீறி செயல்படும் ஸ்ரீ லெட்சுமிபிரியா கட்டிடத்தை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்படி இடித்து அகற்றுமாறு நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு அளித்த புகார் மீது நடவடிக்கை எடுக்கத்தவறிய நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து மாண்புமிகு மரியாதைக்குரிய தாங்கள் தங்களின் நேரடி பார்வையில் ஒரு குழு அமைத்து ஸ்ரீ லெட்சுமிபிரியா கட்டிடத்தை இட நேராய்வு செய்து மனுநீதிச்சோழன் போல் நீதி வழங்குமாறு தாழ்மையுடன், பணிவுடன் கீழ்ப்படிந்து கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒரு விசாரணை அமைப்பு மீது சந்தேகம் ஏற்படுவதாக புகார்தாரர் கூறினால் தொடர்ந்து அவரே விசாரிப்பது இயற்கை நீதிக்கு விரோதமாக இருக்கும் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கூறி உள்ளதால் மாண்புமிகு தங்களின் நேரடி பார்வையில் விசாரிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் 06.01.2026 விசாரணையின்போது தாக்கல் செய்த வாக்குமூலம் பின்வருமாறு.

“திருச்சி மாவட்டம் துறையூர் திருச்சி சாலையில் அன்னை மருத்துவமனைக்கு வடக்கில் இருக்கும் ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடம் விதிமீறி செயல்படுகிறது. ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடத்தில் கீழ் தளத்தில் ராயல் பர்னிச்சர் அன்ட் எலக்ட்ரானிக்ஸ் கடை 5000 சதுர அடியிலும், அதுபோக கீழ் தளத்தில் பேட்டா கடை, சித்ரா ஜெராக்ஸ் கடை இயங்கி வருவதோடு, தரை தளத்தில் வடக்கு சைடில் 6 கடைகள் மொத்தம் 5000 சதுர அடியில் இயங்கி வருகிறது. முதல் தளத்தில் ராயல் பர்னிச்சர் குடோன் 5000 சதுர அடியிலும், கும்பகோணம் பரஸ்பர நிதி நிறுவனம் 5000 சதுர அடியிலும், இரண்டாம் தளத்தில் திருகுமரன் ஆட்டோமொபைல்ஸ் மற்றும் 3 தங்கும் அறைகள் 2000 சதுர அடியில் இயங்கி வருவதோடு, மூன்றாம் தளத்தில் 2 அறைகள் உள்ளது. கட்டிடத்தின் மெயின் வாசல் அரசு கழிவுநீர் கால்வாயை மூடி கால்வாயின் மேல் வாசல்படி வைத்ததோடு பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமலும், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் செட் பேக் விடாமல் கட்டப்பட்டுள்ளது.

எனவே அனைத்து விதமான விதிமுறைகளையும் மீறி செயல்படும் ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடத்தை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்படி இடித்து அகற்றுமாறு நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு அளித்த புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கத்தவறிய நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து மாண்புமிகு, மரியாதைக்குரிய தாங்கள் தங்களின் நேரடி பார்வையில் ஒரு குழு அமைத்து ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடத்தை இட நேராய்வு செய்து மனுநீதிச்சோழன் போல் நீதி வழங்குமாறு தாழ்மையுடன், பணிவுடன் கீழ்ப்படிந்து கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒரு விசாரணை அமைப்பு மீது சந்தேகம் ஏற்படுவதாக புகார்தாரர் கூறினால் தொடர்ந்து அவரே விசாரிப்பது இயற்கை நீதிக்கு விரோதமாக இருக்கும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறி உள்ளதால் மாண்புமிகு தங்களின் நேரடி பார்வையில் விசாரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.”

7. மேலும் விசாரணை அன்று மனுதாரர் தன்னுடைய முறையீட்டு மனு எண்.205/ந/2025, 06.01.2026 விசாரணையில் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையை அளிக்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

“திருச்சி மாவட்டம் துறையூர்–திருச்சி சாலையில் 20000 சதுர அடி பரப்பளவில் அரசு கழிவு நீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து பார்க்கிங் வசதி இல்லாமலும், செட் பேக் வசதி கட்டிடத்தின் 4 பக்கமும் 1 அங்குலம் கூட விடாமல் TNCDBR சட்டத்திற்கு விரோதமாகவும், தமிழ்நாடு அடுக்குமாடி மற்றும் பொதுக்கட்டிட விதிகள், 1973க்கு விரோதமாகவும் விதிமீறி கட்டப்பட்டுள்ளது ஸ்ரீ லெட்சுமிபிரியா கட்டிடம்.

மேலும் ஆணையர் அவரின் உயர் அதிகாரியான அரசு இணைச்செயலாளர் என் புகாரின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கடித எண்.2092/MA-1/2025-1 நாள் 24.03.2025–ல் பிறப்பித்த உத்தரவையும் கடுகளவு கூட மதிக்கவில்லை. மேலும் ஆணையருக்கு நான் அளித்த புகாரிலேயே பல்வேறு உயர்நீதிமன்ற உத்தரவுகளை சுட்டிகாட்டியதோடு, ஆணையர் அவரின் உயர் அதிகாரிகளின் உத்தரவை மதிக்காவிட்டாலும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்திடம் பயமும், மரியாதையும் கொண்டு விதி மீறி செயல்படும் ஸ்ரீ லெட்சுமிபிரியா கட்டிடத்தை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்படி இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி புகார் கொடுத்தும் ஆணையர் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் துறையூர் நகராட்சி ஆணையர் அளிக்கும் வாக்குமூலம், அறிக்கை அனைத்தும் விதிமீறிய ஸ்ரீ லெட்சுமிபிரியா கட்டிட நிர்வாகியை எப்படியும், எப்பாடுபட்டாவது காப்பாற்றும் நோக்கத்தோடு பொய்யாக இருக்கும்.

எனவே உச்சபட்ச நேர்மை கொண்ட மாண்புமிகு மரியாதைக்குரிய தாங்கள் தங்களின் நேரடி பார்வையில் ஒரு குழு அமைத்து துறையூரில் உள்ள ஸ்ரீ லெட்சுமி பிரியா கட்டிடத்தை இட நேராய்வு செய்து ஸ்ரீ லெட்சுமிபிரியா கட்டிடம் TNCDBR சட்டப்படியும், தமிழ்நாடு அடுக்குமாடி மற்றும் பொதுக்கட்டிட விதிகள், 1973 சட்டப்படியும் அமைந்துள்ளதா என்பதையும் கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவுச்சான்று பெறப்பட்டுள்ளதா என்பதை கண்டறியவும், ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த 67,69, 102, 104, 197 ஆகிய வழக்கு விசாரணையின் போது 5 கட்டிடகாரர்களும் நான் புகார் கொடுத்ததற்கு பின்பு பார்க்கிங் வாங்கியதாக இந்த முறைமன்றத்தில் பொய்யாக கூறி உள்ளதால் இந்த வழக்கில் பார்கிங் வசதி புதிதாக வாங்கி உள்ளதாக கூறினால் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய சொல்லி அதனை தாங்கள் உத்தரவில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

மேலும் முறையீட்டு மனு எண்.24/ந/2024–ல் துறையூர் நகராட்சி ஆணையர் அளித்த அறிக்கையில் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு (தரைத்தளம்+முதல் தளம்) 2000 சதுர அடி என்று குறிப்பிட்டுள்தால் ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடம் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்புபடி கட்டப்பட்டுள்ளதா என்பதை கண்டறியவும்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த 5 வழக்குகளிலும் கட்டிட அனுமதி பெறப்பட்ட ஆவணம் நகராட்சியிடம் இல்லை என்று கூறுவதால் ஆவணம் இல்லை என்று கூறியதற்காக கல்வித்துறை இயக்குநர் அவர்களுக்கு ரூ.50 லட்சம் மாண்புமிகு உயர்நீதிமன்ற அபராதம் விதித்ததுபோல் இந்த வழக்கிலும் ஆவணம் இல்லை என்று கூறினால், உயர்நீதிமன்ற உத்தரவின்கீழ் துறையூர் நகராட்சி ஆணையருக்கு அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

எனவே மாண்புமிகு தங்களது விசாரணையில் ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால், மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு 12199–12200 நாள் 30.04.2025ன்படி இடித்து அகற்றுமாறும் நான் புகாரில் கூறியது பொய் என்றால் என் மீது எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவோடு, தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.”

8. துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.1427/எப்1/2025 நாள் 29.12.2025–ல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்–2026 (SIR) பணியின் காரணத்தினால் 06.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலை உள்ளதால் ஆணையருக்கு பதிலாக நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் திருமதி. ர.திவ்யதர்ஷினி 06.01.2026 அன்று நடைபெறும் விசாரணையில் ஆஜராக கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி விசாரணையில் நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திருமதி. ர.திவ்யதர்ஷினி ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார் . அதில்

மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள ஸ்ரீ லட்சுமி பிரியா நிறுவனம் தரைத்தளம் 5000 சதுர அடியும், முதல் தளம் 5000 சதுர அடியும், இரண்டாம் தளம் 1000 சதுர அடி ஆக மொத்தம் 11000 சதுர அடி கொண்ட RCC கட்டிடத்தில் இயங்கி வரும் வணிக வளாகம் ஆகும். 30 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது என்றும் கட்டிட அனுமதி பெறப்பட்டு உள்ளதால் அவற்றைத்தேடித் தருவதாக கடை உரிமையாளர் கட்டிடத்தினை கள ஆய்வு செய்தபோது தெரிவித்தார். ஆனால், ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் கட்டிட அனுமதி வழங்கப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கக்கோரி கட்டிட உரிமையாளருக்கு 11.04.2025–ல் அறிவிப்பு வழங்கப்பட்டது. கட்டிட உரிமையாளரிடமிருந்து ஆவணங்கள் பெறப்படாததால் மேற்படி கட்டிடத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் 05.12.2025 அன்று கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. கட்டிட உரிமையாளரிடமிருந்து இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கப்பெறவில்லை. 11000 சதுர அடிக்கு 2750 சதுர அடி வாகன நிறுத்துமிடாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை செய்து கொள்வதாக கட்டிட உரிமையாளர் தெரிவித்துள்ளார். அடுத்த அறிவிப்பு மீண்டும் விரைவில் வழங்கப்படும் ஆக்கிரமிப்பு குறித்த நில அளவீடு செய்து தருமாறு வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அறிக்கை பெற்றபின் அதன் மீது தொடர் நடவடிக்கை துறையூர் நகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிட உரிமையாளர் 06.01.2026 நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"எங்களது ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடம் எனது தாயார் பெயரில் இருந்தது. பின்னர் எனது பெயருக்கு பத்திர பதிவு செய்யப்பட்டதாகும். சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் கட்டிடம் அமைந்துள்ள இடத்தை கிரையம் செய்து 5 ஆண்டுகள் கழித்து கடை கட்டப்பட்டு, சொத்துவரி நடப்பு ஆண்டுவரை துறையூர் நகராட்சிக்கு செலுத்தப்பட்டு வருகிறது. எனது தாயார் வசம்தான் எங்களது கடை தொடர்பான ஆவணங்கள் இருந்தது. எனது தாயார் 2019–ல் காலமாகிவிட்டதால் அவர்களிடமிருந்து ஆவணங்களை சேகரிக்க முடியவில்லை. தற்பொழுது எனது தந்தையார் தான் மேற்படி கட்டிடத்தை பராமரித்து வருகிறார். அவருக்கும் வயது முதிர்வடைந்து விட்டதால் ஆவணங்களை சேகரிக்க இயலவில்லை. மேற்படி கட்டிடத்திற்கு பார்க்கிங் வசதி செய்து தரப்பட்டுள்ளது. தரை தளத்தில் வாடகைக்கு இருப்பவர்கள் மழை மற்றும் வெயிலுக்காக தற்காலிகமாக முகப்பு ஷெட் அமைத்துள்ளனர்.

மேலும் நகராட்சி விதிகள் மற்றும் தமிழ்நாடு அரசு விதிகளுக்கு உட்பட்டு எங்களது கட்டிடத்தில் ஏதேனும் விதிமீறல்கள் இருக்கும்பட்சத்தில் அதனை வரன்முறை செய்து கொள்கிறோம் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

10. இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிட உரிமையாளர் தனது நாளிடப்படாத கடிதத்தினை அரசு செயலாளர், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னைக்கு முகவரியிட்டு அதன் நகலினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி அக்கடிதம் இம்முறைமன்ற நடுவத்தில் 03.02.2026 அன்று பெறப்பட்டுள்ளது. அதில்:-

“திரு.S. அன்பழகன் என்பவரது புகார் மனுவில் எங்களது ஸ்ரீ லட்சுமி பிரியா கட்டிடம் விதிகளை மீறி கட்டப்பட்டு செயல்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி புகார் தொடர்பாக துறையூர் நகராட்சி அறிவிப்பு எண்.1/2025/எப்1, நாள் 03.12.2025 எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னையின் 11.12.2025 தேதியிட்ட கடிதத்தின் மூலம் எங்களை 06.01.2026 அன்றைய விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

நாங்கள் 06.01.2026 விசாரணையில் கலந்து கொண்டு எங்களது வாக்குமூலத்தை மேற்படி முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளோம் அவர்களும் இனி வரன்முறை செய்து கொள்ளுமாறு கூறினார். மேலும் எங்களது கட்டிடத்தில் பார்க்கிங் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

என் பெயரில் உள்ள ஸ்ரீ லட்சுமி பிரியா கட்டிடம் எனது தாயார் வழி சொத்து ஆகும். என் தாயாருக்கு சொந்தமான இடத்தின் முற்பகுதியில் 25 வருடம் முன் ஒரு பகுதியும், 15 வருடத்திதற்கு முன் இடத்தின் முன் பகுதி கட்டிடத்தில் சில மாறுதல்களுடன் பின் பகுதியை இணைத்து கட்டிடம் துறையூர் நகராட்சியில் முறையான அனுமதி பெற்று கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

2016–ல் எனது பெயருக்கு கட்டிடத்தின் ஒரு பகுதியும் என் தாயார் 2019–ல் மாரடைப்பால் இறந்த பிறகு கட்டிடம் முழுவதுமாக எனது பெயருக்கு எழுதப்பட்டது. 2009–ல் எனக்கு திருமணம் நடந்தது. அன்று முதல் இன்று வரை நான் சென்னையில் வசித்து வருகிறேன். எனது கணவரும் 2021 ஆம் ஆண்டு கொரானாவினால் பாதிக்கப்பட்டு மாரடைப்பால் இறந்து விட்டார். இதுநாள் வரை எனது தந்தை கட்டிடத்தை கவனித்து வந்தார். இந்நிலையில் 2025 டிசம்பர் 9ஆம் தேதி அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று படுக்கையில் இருக்கிறார். இந்த கட்டிடம் மட்டுமே எனக்கும், என் மகனுக்கும் வாழ்வாதாரமே. அதை வைத்து தான் நான் என் மகனை படிக்க வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இதுநாள் வரை எனது பெயரில் உள்ள ஸ்ரீ லட்சுமி பிரியா கட்டிடத்திற்கு எவ்வித பாக்கியும் இல்லாமல் நகராட்சி வரிமுறையாக செலுத்தி வருகிறோம்.

என் தாயார் இடம் தான் அனைத்து ஆவணங்களும் இருந்தது. அவர் இறந்த பிறகு நாங்கள் ஆவணங்களை தேடி பார்த்தபோது கட்டிடத்தின் Plan மட்டும் காணவில்லை. என் தாயார் எங்கு வைத்தார் என்று தெரியவில்லை.

நாங்கள் அனைவரும் வீட்டில் தேடி எடுக்க முயற்சி செய்தோம். ஆனால் எங்களுக்கு கிடைக்கவில்லை. நகராட்சி சென்று பிளான் நகலை எடுத்து தருமாறு கூறினோம். அவர்களும் 25 வருடம் ஆகிவிட்டது எடுக்க இயலாது என்று கூறிவிட்டனர்.

நாங்கள் தற்பொழுது எங்களது கட்டிடத்தை தமிழ்நாடு அரசு விதிகள் மற்றும் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு வரன்முறை செய்து கொள்ள விரும்புகிறோம். ஆகவே Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80A–ன்படி தங்களிடம் மேல் முறையீடு செய்கிறோம்.

அரசு விதிகளுக்கு உட்பட்டு நடக்கிறோம் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். எங்களது கட்டிடத்தை வரன்முறை செய்து கொடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளார்.

11. இது குறித்து துறையூர் நகராட்சி ஆணையர் தனது 04.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட கூடுதல் விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

“ஸ்ரீ லெட்சுமி பிரியா உரிமையாளர் தனது வாக்குமூலம் மற்றும் கடிதத்தில் அவரது கட்டிடத்தை தமிழ்நாடு அரசு விதிகள் மற்றும் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு வரன்முறை செய்து கொள்ள Tamilnadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான ஒப்புகை சீட்டு

இணைக்கப்பட்டுள்ளதாகவும் பா.லட்சுமிபிரியா, ஸ்ரீ லெட்சுமி பிரியா காம்ப்ளக்ஸ் உரிமையாளர் தெரிவித்துள்ளார் என்ற விவரம் தெரிவித்துக்கொள்கிறேன்".

12. மனுதாரரின் மனு, வாக்குமூலம், விசாரணையில் அளித்த எழுத்துப்பூர்வ அறிக்கை, முதல் எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம், இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிட உரிமையாளரின் வாக்குமூலம், மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

திருச்சி மாவட்டம், துறையூர் திருச்சி சாலையில் 20000 சதுர அடி பரப்பளவில் அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங் வசதி இல்லாமல் விதிமீறி செயல்படும் ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடத்தை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்படி இடித்து அகற்ற வேண்டி பொதுநலன் கருதி புகார் கொடுத்தும், நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் துறையூர் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து விதிமீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடத்தை அகற்ற வேண்டுமென மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

ஸ்ரீ லட்சுமிபிரியா நிறுவனம் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதும், தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் தலா 10000 சதுரடி பரப்பளவில் RCC கட்டிடம் அமையப்பெற்ற ஸ்ரீ லட்சுமிபிரியா வணிக வளாக கட்டிடம் இயங்கி வருவதும். இரண்டாம் தளத்தில் 1000 சதுரடி பரப்பளவில் RCC Building அமையப்பெற்ற + மொட்டை மாடி (பயன்பாட்டில் இல்லை) கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 11000 சதுரடி என்பதும், தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ளதாகவும், கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ள விவரம் நகராட்சி அலுவலகத்தில் இல்லை என்பதும், கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் ஸ்ரீ லட்சுமிபிரியா உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதும், கட்டிடத்தின் மொத்த பரப்பளவு 11000 சதுரடிக்கு 2750 சதுரடி இடம் வாகனம் நிறுத்துமிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும், ஆனால் ஸ்ரீ லட்சுமிபிரியா உரிமையாளர் வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யவில்லை என்பதும், ஆக்கிரமிப்பு குறித்து நில அளவீடு செய்து தருமாறு வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதும், ஸ்ரீ லெட்சுமி பிரியா காம்ப்ளக்ஸ் உரிமையாளர் தனது கட்டிடத்தை தமிழ்நாடு அரசு விதிகள் மற்றும் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு வரன்முறை செய்து கொள்ள Tamilnadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80-அன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார் எனத்தெரிவித்திருப்பதும், துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிடம் தனது தாயர் பெயரில் இருந்து பின்னர் தனது பெயருக்கு பத்திர பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் கட்டிடம் அமைந்துள்ள இடத்தை கிரையம் செய்து 5 ஆண்டுகள் கழித்து கடை கட்டப்பட்டு சொத்துவரி நடப்பு ஆண்டு வரை துறையூர் நகராட்சிக்கு செலுத்தப்பட்டு வருவதும், தனது தாயார் வசம் தான் தங்களது கடை தொடர்பான ஆவணங்கள் இருந்தது எனவும், தனது தாயார் 2019ல் காலமாகிவிட்டதால் அவரிடமிருந்து ஆவணங்களை சேகரிக்க இயலவில்லை எனவும், தற்பொழுது தனது தந்தையார் தான் மேற்படி கட்டிடத்தை பராமரித்து வந்தார் எனவும், அவருக்கு வயது முதிவடைந்து விட்டதால் ஆவணங்களை சேகரிக்க இயலவில்லை எனவும், மேற்படி கட்டிடத்திற்கு பார்க்கிங் வசதி செய்து தரப்பட்டுள்ளது எனவும், தரைதளத்தில் வாடகைக்கு இருப்பவர்கள் மழை மற்றும் வெயிலுக்காக தற்காலிகமாக முகப்பு ஷெட் அமைத்துள்ளனர் எனவும், நகராட்சி விதிகள் மற்றும் தமிழ்நாடு அரசு விதிகளுக்கு உட்பட்டு தங்களது கட்டிடத்தில் ஏதேனும் விதிமீறல்கள் இருக்கும்பட்சத்தில் அதனை வரன்முறை செய்து கொள்கிறோம் எனவும், தற்பொழுது தங்களது கட்டிடத்தை தமிழ்நாடு அரசு விதிகள் மற்றும்

நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு வரன்முறை செய்து கொள்ள Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80Aன்படி அரசுக்கு மேல் முறையீடு செய்துள்ளதும் இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீ லட்சுமிபிரியா கட்டிட உரிமையாளரின் வாக்குமூலம் மூலம் தெரிய வருகிறது.

இந்நேர்வில், கட்டிடத்தின் உரிமையாளர், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 (Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்கீழ் அரசிற்கு சீராய்வு மனு அளிக்கப்பட்டதை உறுதி செய்து கொண்டு அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை எடுக்க துறையூர் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2026–ஆம் ஆண்டு, மே 08–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.S.அன்பழகன்,
எண்.155, அசோக் நகர்,
முசிறி மெயின் ரோடு,
துறையூர் அஞ்சல் & வட்டம்.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 010.
2. நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
3. பா.லட்சுமி பிரியா,
எண்.42, S4, ஹரிதா பிளிஸ்,
பமீலா தெரு, தேவராஜ் நகர்,
பாரதி பல்கலைகழகம் எதிரில்,
சேலையூர், சென்னை – 600 073.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர். 14/5/26